JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

DVC.No.15/2020 Date: 11.08.2023 R.W.1

பெயர் : சந்திரசேகர்
தந்தை /கணவர் பெயர் : பக்தவச்சலம்

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 11th day of August 2023

சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கபட்ட சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

1. நான் எங்கு வேலை செய்து வருகிறேன் என்றால் வி.கே.ஆர் டிரைவிங் பள்ளியில் வேலை செய்து வருகிறேன். நான் அங்கு வேலை செய்வதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளதா என்றாலும் அதை நீதிமன்றத்தில் சமர்பிக்க இயலுமா என்றால் அதற்கான ஆதாரம் உள்ளது என்னால் சமர்பிக்க இயலும். நான் எத்தனை ஆண்டுகளாக அங்கு பணி புரிந்து வருகிறேன் என்றால் சுமார் 15 ஆண்டுகளாக பணி புரிந்து வருகிறேன். நான் திருமணத்தின் போது எங்கு வேலை செய்து வந்தேன் என்றால் அணிதா டிரைவிங் பள்ளியில் வேலை செய்து வந்தேன். என் மீது குற்ற வழக்கு ஏதாவது நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. போலீசார் என்னை அழைத்து விசாரித்தார்களா என்றால் என்னுடைய வீட்டிற்கு வந்து விசாரித்துவிட்டு சென்றார்கள். மனுதாரர் தரப்பில் திருமணத்தின் போது பரிசுகள் சீர்வரிசைகள் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை.

2. என்னுடைய மகன்கள் என்னுடன் தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். மனுதாரர் மாற்றுத்திறனாளி என்பதும் இதயம் சம்மந்தமான பிரச்சினை உடையவர் என்று எனக்கு தெரியும் என்றால் அவர் மாற்றுத்திறனாளி என்பது தெரியும் அதை தெரிந்து தான் நான் திருமணம் செய்து கொண்டேன். மனுதாரர் தன்னிச்சையாக எந்த வேலையும் செய்ய இயலாது என்றால் சரியல்ல. நானும் மனுதாரரும் பிரிந்து வாழும் காலக்கட்டத்தில் என்னுடைய பிள்ளைகளை மனுதாரர் வீட்டிற்கு அழைத்து சென்றுள்ளேனா என்றால் இல்லை, என்னுடைய பிள்ளைகள் அவ்வாறு கேட்டது இல்லை. நான் சாய்ராம் வெற்றிவேல் பாபா என்று 3 டிரைவிங் பள்ளிகள் நடத்தி வருகிறேன் என்றாலும் அதை மறைத்து வேறு ஒரு டிரைவிங் பள்ளியில் வேலை செய்து வருகிறேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் வீட்டில் எனக்கு திருமணத்திற்காக தந்த 45 சவரன் நகைகளை என்னுடைய தொழில் அபிவிருத்திக்காக செலவு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

3. மனுதாரர் மாற்றுத்திறனாளி என்பதால் அவரை நான் கொடுமைப்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் மருத்துவ செலவு மாதம் தோறும் குறைந்த பட்சம் ரூ.50,000 செலவாகிறது என்றாலும் மனுதாரருக்கு அவ்வாறு மருத்துவ செலவிற்கு நான் எந்த பணமும் கொடுக்காமலும் அவரை வீட்டிலிருந்து அனுப்பி வைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Sd/-V.Paramveer,
Judicial Magistrate,
Ambattur.

//True Copy//

Judicial Magistrate, Ambattur